Koviloor Digital Library

உ

சிவமயம்

அரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

ACC. NO.
46355

திருஞானசம்பந்தர் கால நிர்ணய விளக்கம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

சிவமயம்

அரி ஓம் நன்றுக குரு வாழ்க குருவே துணை

5/1

திருஞானசம்பந்தர் கால நிர்ணய விளக்கம்

இந்நூல் ஆசிரியர்
"தமிழ் வேதநாவலர்" சற்குரு. சித.வே. சண்முகநாத பிள்ளை
தேவகோட்டை

இஃது கனடா டாக்டர் சித. ஏகப்பன் செட்டியார் அவர்கள்
ஆர்வத்தினாலும் பேரன்பினாலும்

தேவகோட்டை
ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸில் பதிப்பிக்கப் பெற்றது

KOVILOOR ANDAVAR
A. No. 4355
LIBRARY, KOVILOOR

வெளியீடு
முத்தமிழ் வேதத் திருச்சபை
முத்தாத்தாள் நடுநிலைப் பள்ளி, வ.பெரி.மு. தெரு,
தேவகோட்டை - 630 302.

Koviloor Digital Library

சிவமயம்

அரி ஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை

நூலின் பெயர்	:	திருஞானசம்பந்தர் கால நிர்ணய விளக்கம்
இரண்டாம் பதிப்பு	:	சர்வஜித்து ஆண்டு (2007) மார்கழி மாதம்
நூலாசிரியர்	:	சற்குரு. சித.வே. சண்முகநாத பிள்ளை
உரிமை	:	முத்தமிழ் வேதத் திருச்சபையோர், தேவகோட்டை.
பக்கங்கள்	:	32
வெளியீடு	:	முத்தமிழ் வேதத் திருச்சபையோர், தேவகோட்டை.
தாள்	:	16 கிலோ மாப்லித்தோ
நூலின் அளவு	:	டெமி 1/8
விலை	:	ரூ. 20/-
எழுத்து	:	12 புள்ளி
கிடைக்குமிடம்	:	**Dr. SV. முருகேஷ்** R.I.M.P.A.M.I.H. முத்தமிழ் வேதத் திருச்சபைத் தலைவர் சித்த மருத்துவம் கிணற்றுநீர் நிபுணர், புதுக்கோட்டை. **இராம. ஆதிரெத்தினம்** இணைச் செயலாளர், முத்தமிழ் வேதத் திருச்சபை 19, ரெகுநாதபுரம் மேற்கு, தேவகோட்டை. போன் : 95+4561+270113 செல் : 9486361107 **உபமன்னியன் நூலகம்** 105/A1, கண்டதேவி ரோடு தேவகோட்டை - 630 302. போன் : 95+4561+309924 / செல் : 9486361107
கணினி & அச்சு அமைப்பு	:	**ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸ்** தேவகோட்டை - 630 302. போன் : 04561+261961 கோயமுத்தூர் - 641 001. போன் : 0422+3247879 செல் : 9361410269 email : swamirajbal@gmail.com

Koviloor Digital Library

உ
சிவமயம்



இந்நூல் ஆசிரியர் :
"தமிழ் வேதநாவலர்" "வைத்தியமணி"
சற்குரு. சித.வே. சண்முகநாத பிள்ளை
தேவகோட்டை

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரி ஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணை

முன்னுரை

திருஞான சம்பந்தப் பெருமானின் திருவாவதார கால நிர்ணயம் கூற வேண்டிய நூலாகிய திருத்தொண்டர் புராணத்திற் சேக்கிழார் சுவாமிகளே அதைக் குறிப்பிடவில்லை. தற்கால ஆராய்ச்சியாளர்கள் கி.பி. ஆரும் நூற்ருண்டு என்று குறிப்பிடுகிருர்கள். ஒரு சரித்திரம் எழுதுங்கால் அந்தச் சரித்திர நாயகனுடைய கால நிர்ணயம் இல்லாமல் எழுதினுல் அது நிறைவுற்றதாகாது. அதை நிறைவு செய்யக் கருதி ஆராய்ச்சி செய்து எழுதியதுடன் முருகப் பெருமானின் அம்சமே திருஞான சம்பந்தர் என்று சிவாநுபூதிச் செல்வராகிய அருணகிரிநாதரும் இன்னும் பல சிவஞானச் செல்வர் ஆகிய பெரியவர்களும் சொல்லியதன் காரண விளக்கமும் இதிற் குறிப்பிட்டுள்ளேன். இதைக் கண்ணுற்ற சிவபுண்ணிய சீலர்களாகிய முத்தமிழ் வேதத் திருச்சபையார் இதை வெளியிடும் பொறுப்பை யேற்றுக் கொண்டார்கள். அதில் தன்னுடைய உடல் நிலை நலிவையும் பொருட்படுத்தாது அச்சுக்கூடத்திற்குச் சென்று பிழை திருத்தம் பார்த்துக் கொடுத்து நல்லமுறையில் இது அமையும் பொறுப்பை தமிழாசிரியர் வித்துவான் இராதாகிருஷ்ணன் அவர்கள் ஏற்றுக்கொண்டது போற்றுதற்குரியது. இது வெளிவருதற்குதவிய முத்தமிழ் வேதத்திருச்சபையாருக்கும் நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த ஸ்ரீபாலாஜி கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

இங்ஙனம்
"தமிழ்வேத நாவலர்"
சித.வே. ஷண்முகநாத பிள்ளை
தேவகோட்டை
கலியுக ௵ 5081 - சித்தார்த்தி ௵ ஆடி மீ 7 உ

Koviloor Digital Library

சிவமயம்

அரி ஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணே

அணிந்துரை

களிமேடு அப்பர் அவைப் புலவரும், தமிழ்வேத நாவலர், வைத்தியமணி
சித.வே.ஷண்முகநாத பிள்ளை அவர்களின் மாணுக்கரும் ஆகிய
வித்வான் **க. அப்பாராசன்,** தமிழாசிரியர்,
தே பிரித்தோ மேனிலைப்பள்ளி, தேவகோட்டை.

1. ஞானப்பூங் கோதை சூடும் நறுமலர்த் தேனுண் வண்டு
கானப்பண் திறங்கள் தம்மில் கவினுறு மறைகள் பாட
ஞானத்தின் உருவாய்த் தோன்றி ஞானப்பால் அமுதம் உண்டு
மோனத்தில் திகழும் ஞான சம்பந்தர் முனிவர் பொற்ருள்

2. தானமே சரணுக் கொண்டு தகவினிற் பிறங்கும் அண்ணல்
வானமே முதலாம் பூத வகைதனில் தன்மை யெல்லாம்
ஆனபே ரறிஞர் தங்கள் அகங்கொள அளிக்கும் வள்ளல்
ஞானமே இலக்காய்க் கொண்டு நல்லறம் உரைக்கும் ஐயன்

3. சித்தர்நூல் கலைகள் யாவும் சிறப்புற உணர்ந்த மேதை
அத்தமோ டாவி ஆக்கை அரனருள் பொலிவு மேவும்
முத்தமிழ் விரகர் பாடி மொழியும்பண் திறத்தை யெல்லாம்
வித்தகம் விளங்க மாந்தர் வியப்புற விளக்கும் வேந்தர்

4. கதமெனும் பொருண்மை காணுக் கருணையிற் கடலாம் மூர்த்தி
இதமுறத் தமிழ்வே தத்தை இதயத்தில் பதிக்கும் ஏந்தல்
பதமுதல் உலகீ ருகப் பாரித்த நிலைகள் யாவும்
நிதநிதம் வருவோர்க் கெல்லாம் நேருற உரைக்கும் நீரார்

5. திருமுறைப் பண்கள் தம்மின் திகழ்கின்ற மறையின் பாங்கை
ஒருமுறை ஒன்றி நிற்கும் உளத்தினுல் தெளிவாய்க் கண்டு
பெருநில மக்கள் எல்லாம் பெருநெறி பேணும் பெட்பால்
குருநெறி மரபின் ஓங்கி கொள்கையை வளர்க்கும் சொற்கோ

Koviloor Digital Library

6. கானப்பண் பொழியுங் கொண்டல் கவுணியர் குலத்தின் தீபம்
ஞானசம் பந்தர் கால ஆராய்ச்சி என்னும் நூலை
மோனசம் பந்தம் பெற்ற முத்தமிழ் வரைப்புக் கீந்த
தானத்திற் சிறந்த பெம்மான் சண்முக நாதக் கோமான்

7. பாலரு வாயர் கால வரைவுடன் அவர்தம் பாங்கை
மேலுற அமைந்து உச்சம் காட்டுநற் கோள்கள் சீரும்
கோலமார் எழிலி பங்கன் கூறெலாம் கண்ட கண்கள்
சீலமார் நட்ட பாடைப் பண்ணதின் சிறப்புங் காட்டும்

8. முருகனின் அம்சமாக முத்தமிழ் விரகர் தோன்றும்
அருமையும் அருளின் ஆற்றல் அமைந்தசீர்ப் பெருமை கூறி
பெருநெறிப் பிரண வத்தின் பீடெலாம் விளக்கும் இந்நூல்
குருமுறை யாக மன்னும் கொள்கையின் நிலவும் என்றும்

9. முருகனின் அம்சமாக முத்தமிழ் விரகர் வந்த
அருமையை ஏதுவோடு ஆன்றவர் உவக்கும் வண்ணம்
பெருநிதிச் செல்வமாக பீடுயர் மணிகள் தம்மை
ஒருவழிக் கோத் தளித்த உரன்மிகு பெம்மான் வாழி

10. அன்னையாய் எனக்கு நாளும் அருட்கலை அமுதம் ஊட்டி
நன்னயப் பொருள்கள் யாவும் நலமுற விளக்கி யாக்கை
துன்னிய பிணிகள் போக்கித் துயரினைத் துடைக்கும் ஐயன்
பொன்னடி வாழி செல்வப் புவியெலாம் சிறக்க வாழி.

Koviloor Digital Library

சிவமயம்

அரி ஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை

ஆரறி வாரெங்க ளண்ணல் பெருமையை
யாரறி வாரிவ் வகல நிகளமும்
பேரறி யாத பெருஞ்சுட ரொன்றதின்
வேரறி யாமை விளம்புகின் றேனே.

திருஞான சம்பந்தர் கால ஆராய்ச்சிப் பகுதி (ரு) ஆத்திகத்துவம்

திருஞானசம்பந்தப் பெருமான் சீர்காழிப் பதியிற் றிருவவதாரம் செய்யும் முன்பே அவருடைய அவதாரச் சிறப்புக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது உலகின் கண் திகழும் மாபெரும் நிகழ்ச்சிகளைத் தெய்வம் முன்னின்றுணர்த்தும் செயற்பாட்டின் பாற்பட்டது. அதன் விபரம் வருமாறு :-

காஞ்சி புராணம் திருமேற்றளிப் படலம் : திருமால் இறைவனை வேண்டித் தவங் கிடந்து யான் உனது திருவருளால் எல்லா நலன்களும் பெற்றுள்ளேன். இப்பொழுது உன் உருவையும் பெறுதலாகிய சிவசாரூபம் நல்க வேண்டும் எனக் கேட்க, அதைத் திருச்செவியேற்ற பரமன்,

"என்ற வாய்மொழி திருச்செவி யேறலுமெங்கோ
னென்று கூறுதலுற்றன னுவண மீதுயர்ந்தோய்
நன்று தேர்வை வைவச்சுத மனுவந்தர நணுகு
மன்று நாலிரண் டீற்றுடை யிருபதாங்கலியில்"

"காழிமா நகர்க் கவுணியர் குலத் தொரு காளை
ஏழிசைத் தமிழ் ஞானசம்பந்த னெம்மடியான்
யாழநீபெற வெம்முரு விங்குவந் தளிப்பா
னுழியாயது காறுமிவ்வரைப் பினிலமர்ந்து"

"ஈட்டருந்தவமியற்று கென்றருளி" நீங்கினர் என்று கூறப் பெறுகிறது.

இது கலியுகாதி வருஷம் இருபத் தெட்டில் திருஞானசம்பந்தன் காஞ்சியம்பதிக்கு வருவான். அப்போது நீ விரும்பிய சிவசாரூப முத்தியை யுனக்கு அவன் தருவான் என்பனவாம்.

Koviloor Digital Library

அந்த மூர்த்தி கரம் ஓதவுருகீசுவரர் என்ற திருநாமத்தோடு சிவரூபம் பெற்று இன்றும் விளங்கிக் கொண்டிருக்கிறது. இதை அருணகிரிநாதர் அருளிய 'செறிதரு செப்பத் துற்பல வெற்பும்' என்று தொடங்கும் கச்சியம்பதித் திருப்புகழும் விளக்குகிறது. இதனை ஆத்திகப் பெருமக்கள் யாரும் மறுக்க மாட்டார்கள்.

பாரம்பரியத்துவம்

இரண்டாவதாக ஆராயும்போது, மதுரையம்பதியில் திருஞான சம்பந்த சுவாமிகளை ஆதியாகக் கொண்டுள்ள இனமாம் திருஞான சம்பந்தர் ஆதீனம் இருக்கிறது. அவ்வாதீன வரலாற்றுப் பகுதியில் திருஞான சம்பந்தப் பெருமான் பாண்டிமா தேவியாரின் வேண்டுகோளின்படி மதுரையம்பதி எய்திய போது வாகீசர் மடத்துள்ள சிவ முனிவ ரொருவர் தமது மடத்திற்றங்குமாறு வேண்டிக் கொள்ளப் பாண்டிமா தேவியாரும் அவ்வாறே வேண்ட, அவ்விடத்திற் றங்கியிருந்து சமணர்களை வாதில் வென்று மீண்டபோது அச் சிவ முனிவருக்குத் திருவருள் பாலித்து ஞானுநுபூதி வழங்கி சிவஞானயோகீந்திரச் சிவஞான சம்பந்தர் எனத் தீட்சா நாமமிட்டுச் சென்றதாகவும், பாண்டியமன்னன் அது முதல் அந்த மடத்திற்கு வேண்டிய நிலமும் பொருளும் வழங்கித் திருஞான சம்பந்தர் மடம் என நிலைபெற வுதவினனென்றும், இவ்வாதீன பரம்பரையில் நூற்றி முப்பத்து மூன்றுவது பட்டம் சம்பந்த சரணுலய மூர்த்தி யென்பவர் சோழ நாட்டில், துறையூர் வீரமார்த்தாண்ட மன்னனுக் குண்டாகிய பெருநோயைத் திருநீறளித்து நீக்கியருள, அவன் காணிக்கையாக நிலமும் பொருளும் வழங்கினனென்றும், இருநூற்றெழு-பத்தொன்றும் பட்டம் பொன்னம்பலவர் காலத்தில் திருமலை நாயக்க மன்னர் மரபில் வந்த விசுவ நாயக்கரும்; அவர் அமைச்சர் அரிய நாயக முதலியாரும் மடத்திற்குத் தொண்டுகள் செய்து சிறப்புச் செய்தனர் என்றும், அக்காலத்திற்றுன் கோவில் திருப்பணியும், திருவாபரணங்கள் அனேகமும் செய்யப் பெற்றன வென்றும், திருவாலவாய்க் கடவுள் ஆலயத் தனிப் பெரும் பொறுப்பையும் ஆதீனமே ஏற்று நடத்தச் செய்தனர் என்றும், அந்த ஆதிக்கம் இருநூற்றெண்பத்து ஐந்தாவது பட்டம் சுப்பிரமணிய தேசிகர் காலம் வரை நடைபெற்ற தென்றும், இருநூற்றெண்பத்-தேழாவது பட்டம் சரவண தேசிகர் பச்சையப்ப முதலியாருக்கு ஆசிரியராக இருந்து ஆட்சி செய்தாரென்றும், அந்த மரபில் இருநூற்றுத் தொண்ணூற்றேராவது பட்டம் ஆக இப்பொழுது சோமசுந்தர தேசிகப் பரமாச்சாரிய சுவாமிகள் இருந்து அருளாட்சி செலுத்துகிறுர் என்றும் விளக்கமாகக் காணப் பெறுகிறது. இதைப் பாரம்பரியத்துவம் தேர்பவர்கள் யாரும் மறுக்க முடியாது.

Koviloor Digital Library

தலைமுறை தத்துவம்

மூன்றாவதாக ஆராயும்போது இந்த இருநூற்றுத் தொண்ணூறு பட்டங்களின் ஆட்சிக் காலங்களைத் தலைமுறை யொன்றிற்குச் சராசரி இருபது வருஷங்களாக வைத்துக்கணக்கிட்டாலும் ஐயாயிரம் ஆண்டிற்கும் மேலாகிறது. இது முற்கூறிய காஞ்சிப் புராணக் குறிப்பை வலியுறுத்துவதாகவே யுள்ளது என்பதை தலைமுறை தத்துவப் பரம்பரைக் குறிப்புணர்வோர்கள் யாரும் மறுக்க முடியாது.

சாசன முக்கியத்துவம்

நான்காவதாக ஆராயும்போது பாண்டிய மன்னர் பரம்பரையில் பாண்டிய மன்னவர்கள் குல முதல்வனாக மணலூர் நகரை ஆட்சி நிலையமாகக் கொண்டவன் குலசேகர பாண்டியன், இரண்டாவது மலையத்துவச பாண்டியன் ஆதியாக அதுல கீர்த்தி பாண்டியன் வரை நாற்பத்து நான்கு பாண்டியர்கள் ஆட்சி செய்தனரென்றும், அது ரைவத மன்வந்தரகாலம் என்றும், அதுல கீர்த்தி பாண்டியன் காலத்துடன் ஒரு பிரளய காலம் முடிந்த பின் இப்பொழுது நடைபெறும் வைவச்சுதமன் வந்தர காலத்தில் மதுரையம்பதி காடாக இருந்து கீர்த்தி பூஷண பாண்டியன் என்பவன் தோன்றி அகத்திய முனிவரருளால் காடு கெடுத்து நாடாக்கி ஆட்சி செலுத்தி வந்தானென்றும் அறியலாம். அவனுக்குப் பின்னல் இருபத்தொன்பது பாண்டிய மன்னர்கள் ஆட்சி செலுத்தியுள்ளார்கள். அதில் இருபத்தொன்பதாமவன் கூன் பாண்டியன் குப்ஜ அல்லது சுந்தரபாண்டியன் என்பவனுவான். அவன் காலத்திற்றுன் சுரந் தீர்த்தது, சமணர்களைக் கழுவிலேறச் செய்தது ஆகிய நிகழ்ச்சிகளைச் செய்த திருஞானசம்பந்த சுவாமிகள் காலம் ஆகும். இத்துடன் துவாபரயுகம் முடிந்தது. பின்னர் கலியுகத்தில் பன்னிரண்டு தலைமுறைக் காலம் வரை பாண்டிய மன்னர்கள் ஆட்சி நடந்ததென்றும், இப்பன்னிரண்டாவது பாண்டியனுகிய கொடுங்கோற் பாண்டியன் காலத்தில் கோவலனைக் கொலை செய்வித்த காரணத்தால் கண்ணகி கோபக் கனலால் மதுரை தீப்பட்டழிந்தது. இது கலியுக ௵ 305 என்றும், Archalogical Survey of Southern India Vol. II_ காணப் பெறுகிறது. சாசன முக்கிய கருத்தினர்கள் யாரும் இதை மறுக்க முடியாது. இதிலும் காஞ்சி புராணத்திற் கண்டவாறே துவாபரயுக முடிவும் கலியுகத் துவக்கமுமே திருஞான சம்பந்த சுவாமிகள் காலம் என்றுகிறது.

இதில் முன்யுகத்திற் றேன்றிய மக்களின் ஆயுள் காலமும் சரீர வளர்ச்சியும் வேறு; இப்பொழுதுள்ள மக்களின் சரீர வளச்சியளவும் ஆயுள் காலமும் வேறு என்பதைக் கருத்துட் கொள்ளவும்.

Koviloor Digital Library

ஐந்தாவதாக ஆராயும்போது கி.பி. ஆரும் நூற்ருண்டு தான் தேவார ஆசிரியர்கள் மூவரின் காலமாகும். இதற்குச் சான்ருக ஹம்பியில் நிறுவப்பெற்ற வெற்றிக் கற் கம்பமிருக்கிறது. அது பரஞ்சோதியார் வடநாட்டின் மீது படையெடுத்து வெற்றிகொண்ட நினைவுச் சின்னமாகவே நிறுவப்பெற்றது. அதிலுள்ள கல்வெட்டு எழுத்து வாசகங்களே அதை நிரூபிக்கின்றன. பரஞ்சோதியார் என்பவரே சிறுத் தொண்டர் என்னும் அடியாராவர். அவர் ஞானசம்பந்தர் காலத்தவரே என்பதற்கு தேவாரத்திலேயே அகச்சான்று இருக்கிறது. மேலும் சமணர்கள் மதம் தோன்றிய காலமே கி.மு. ஆரும் நூற்ருண்டு தான். ஆகையால் முன் கூறியவைகள் மாறுபடுகின்றன என்று தற்கால ஆராய்ச்சியாளர்கள் விவாதிக்கலாம் என்பது தெரிந்தேதான் மேற்கண்ட வுண்மைகளை எடுத்துக் காட்டினேம். ஹம்பியில் நிறுவப்பெற்ற வெற்றிக் கற் கம்பத்தில் திருஞான சம்பந்தர் காலத்துப் பரஞ்சோதி யென்றில்லை. பரஞ்சோதி என்று பெயர் கொண்ட வீரர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கலாம். ஒரு நாடு பற்பல தடவைகளில் வேற்றரசர்கள் படையெடுப்பிற்கிலக்காகலாம். ஆகையால் அதை ஆதாரமாகக் கொண்டு அவர் திருஞான சம்பந்தர் காலத்துப் பரஞ்சோதியாரே தான் என்று கூறுவது கொஞ்சமும் பொருந்தாது. தேவார அகச் சான்றிற் கண்டவர் அவரேதான் என்று கூறுவதும் பொருந்தாது. சமண மதம் தோன்றியது கி.மு. ஆரும் நூற்ருண்டென்ருல் நமது சதுர்வேத வைதிகச் சமயம் தோன்றிய காலமும் அதுவே யென்ருகி விடும். அப்படிச் சொல்லக்கூடிய அளவிற்கு அறிவுடையவர்கள் யாருமேயில்லை. நமது சதுர்வேத வைதிகச் சமயத்துள் வகுக்கப் பெற்ற அகச் சமயம் ஆறுபுறச் சமயம் ஆறுள், புறச் சமயம் ஆறு என்றவற்றுள் ஒன்றே சமண பௌத்தம். ஆகையால் மறை வழக்கம் அறியாதவர்கள் யாரும் பௌத்தம் முதலிய சமயத்தை கி.மு. ஆரும் நூற்ருண்டெனச் சொல்லாமேயொழிய அறிந்தவர்கள் யாரும் சொல்லவே மாட்டார்கள். ஒவ்வொரு சமயமும் அதன் ஒழுக்க நடைமுறை விதியின் மாறியபோது அவ்வத் துறையில் வல்லவர்கள் தோன்றி மறுமலர்ச்சி பெறச் செய்துள்ளார்கள் அவ்வாருய காலமேதான் மேற்கண்ட சமண சமய தீர்த்தங்கரர்கள் தோன்றிய காலம் ஆகும். அது அந்தச் சமயம் தோன்றிய காலம் அல்ல.

எனவே அதைக் கொண்டு ஞானசம்பந்தர் காலத்தை வரையறுப்பது தவறேயாகும். நமது சமயம் என்று தோன்றியுள்ளதோ அதே காலந்தான் பௌத்த

Koviloor Digital Library

சமண சமயம் தோன்றியுள்ள காலமும் என்றுணர்க. இதைத் தவிர மறுப்புக் கூறுதற்கொன்றும் இல்லை. இந்த விளக்கம் தற்கால ஆராய்ச்சியாளர்களுக்காகவே தரப் பெற்றது.

கன்னியத்துவம்

ஆருவதாக இப்பொழுது நாம் ஆராய்ச்சி செய்யும் திருஞான சம்பந்தர் சரித்திரத்திற்குப் புறம்பான பொதுப்படைக் கலைகளினியற்படி நோக்கும்போது மெய்ஞானியராம் நாதாக்கள் பூவுலகிற் ருேன்றுங் காலம் சூரிய சந்திரன் நிலை மாறுமென்றுங் கடல் கொந்தளித்து நிலை பெயரு மென்றும், மலை நிலம் புகுந்து தரைமட்டமாகி, தரைமட்டந் தீர்ந்து சமதரைப் பகுதியிற் சில புதிய மலைகள் தோன்றுமென்றும் கூறப் பெறுகிறது. இது போகர் ஏழாயிரம் முதலிய நூல்களால் உணரலாம். மேலும் "எப்பொழுது அறம் அழிந்து மறம் ஓங்குமோ அப்பொழுதெல்லாம் நான் தோன்றுவேன்" என்று கீதாசிரியரும் புகலுகின்ருர். நமது ஆகம ஆசிரியரும் மாரிக்காலமாகவே நீண்ட காலங்களும், நீர்நிலைத் தேக்கப் பெருக்கமாகவே வெகுகாலங்களுமிருந்து உயிர்க் கணங்கள் யாவும் அழிவுற்ற பின்னர் எல்லாம் சம நிலைக்கு வந்த காலத்தில் உயிர்க்கணங்களுய்வு பெறும் வண்ணம் இறைவன் மறைவழக் கேற்படுத்தியதாகக் கூறுகிருர்.

மாரியுங் கோடையும் வார்பனி தூங்கநின்று
ஏரியு நின்றங்இளக்கின்ற காலத்து
ஆரியமும் தமிழும் உடனே சொலிக்
காரிகை யார்க்குங் கருணை செய்தானே.

என்பது மேற்கூறிய ஆகம வசனத்திற்குரிய செய்யுள் சான்ருகும்.

பருவ காலங்கள் வரம்பு மீறி இருப்பதற்குக் காரணம் கோள் நிலைத் திரிபேயாகும். அதைத் தான் போகர் வெள்ளிடையாகக் கூறுகிருர். கீதாசிரியன் புகன்றவுட்கிடக்கையுமிதுவே தான்.கோள் நிலைத் திரிபு சூரிய சந்திரர் நீங்கலாக மற்றவைகளுக்கெல்லாம் நிகழ்கின்றன. அதைத்தான் வக்கிரம் என்று சொல்லுகிருேம் சூரிய சந்திரர்களுக்கும் வக்கிரம் ஏற்படும் காலம் உண்டு. அந்தக் காலங்களில் மலையும் நிலை பெயரும். பூகம்பங்கள், பிரளயங்கள், சூரிய சந்திரர்கள் நிலை மாறுதல் அதனுல் அனற் கதிர்வீச்சு ஒரு பக்கமும், கடுங்குளிர் தாக்குதல் மற்ருெரு பக்கமும் நீங்காத வெளிச்சமும், நீங்காத இருளும் ஒரு புறமும் ஏற்படும்.

Koviloor Digital Library

இவ்வாருய இயற்கை ஒவ்வொரு யுக இறுதியிலும் ஏற்படுவதுண்டு அவ்வாருய நிகழ்ச்சிகள் துவாபரயுக இறுதியிலும் ஏற்பட்டுள்ளதைத் தான் மகாபாரதம் களப்பலியூட்டு சருக்கத்தில், பதினுன்காம் பிறையன்று அமாவாசை வந்ததாகக் கூறப் பெறுகிறது. அது இதிகாசச் சரியையாகையால் அதன் நியதிக்கேற்ப அவ்வாருன செயல் கிருஷ்ணனுல் நேர்ந்ததாகக் கூறப் பெறுகிறது. அதே போலச் சூரியன் வக்கிரகதியடைந்ததைத்தான் பதினுன்காம் நாட் போரில் கண்ணன் சக்கராயுதத்தை யேவிச் சூரியனை மறைத்து, மீண்டும் தோன்றச் செய்தானென்று கூறகிறது. சரியையின் கூறுபாட்டை நீக்கிச் சரித்திரக் கூறுபாட்டை யுணர்பவர்களுக்குத் தான் அந் நிகழ்ச்சிகள் யுக இறுதிக் காலத்திலேற்பட்ட சூரிய சந்திர நிலைத் திரிபாகிய வக்கிரகதியின் இயல் என்பது தெரியும்.

இவ்வாருய நிகழ்ச்சிகள் ஏற்படுமுன் தரும புத்திரர் ராய சூயமகம் இயற்றிய காலத்தில்; பூரணைப் பருவமில்லாத காலத்தில் சந்திர கிரஹணம் ஏற்பட்டதாகவும் கூறப் பெறுகிறது. உயிர்க் கணங்களுக்கெல்லாம் சூரிய உதய லக்கினம் உயிர் ஆகும். சந்திரநிலை லக்கினம் உடல் ஆகும். சூரிய சந்திரன் செல்லுங் கதியினின்று திரும்புவதில்லை யாகையால் காலகதி முடிந்த உடலுயிர் மீள்வதில்லை. காலகதி முடிந்த உடலுயிர் மீள்வதும், மீளச் செய்பவர்கள் தோன்றுவதும் இப்பொழுது மாறுபாடின்றி நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூரிய சந்திரர்கள் வக்கிரகதியாய் திரும்புங் காலமேயாகும். அவ்வாருய நிகழ்ச்சி நடைபெற்ற முப்பதாண்டுகள் வரை அதற்குரிய காலம் சனி வட்டமாகிய முப்பதாண்டுகள் நிறைவுற்றுற்றுன் அந்தக் கால இயல்புத் தன்மை முற்றிலும் மாறும்.

ஆகவே துவாபரயுகாந்த காலமே, வெள்ளிடையூழிக் கண்டம் முற்றுக நிகழ்ந்து, கலியுக ஆரம்ப காலமென்றும் படுபாட்டூழித் தொடக்க நிகழ்ச்சியாண்டு முப்பதிற்குள் தான் உடம்பும் உயிரும் அழிந்ததை மீட்கும் திருவருட் சிறப்பையுடைய ஞானசம்பந்தாதி முனிவர்கள் தோன்றியிருக்க முடியும் என்பதையும் எல்லாக் கலைகளும் அழிந்திருந்த காலமாகிய படுபாட்டூழித் தொடக்கமான இவ்வூழிக்கு முதற் காலத்தில்தான் முதல் நூலாகிய வைதிக நான்மறையை யருளிச் செய்திருக்கவும் முடியும் என்பதையும் முக்காலமும் தேர்ந்துரைக்கும் ஆற்றலுடைத்தாகிய கணிய நூல் வல்ல கணியத்துவம் உடையவர்கள் யாரும் மறுக்க முடியாது. இவ்வகையிலும் கலியுகத் துவக்கமென்னும் பாடுகால ஊழிக கண்டத் துவக்கமாகிய முப்பதாண்டுகட் குள்ளாகவே தான் ஞானசம்பந்த முனிவர் தோற்றக் காலம் எனக் கூறும் காஞ்சி புராணக் கூற்றே நிலைப் பாடுடைத்தாகிறது.

Koviloor Digital Library

ஏழாவதாக இதைத் தொடர்புபடுத்திக் கூறும் நூற்களின் வழியாக ஆராய்வோம். கேரள நாட்டில் காலடி என்னுங் கிராமத்தில் சிவகுரு என்பவருக்கு ஆரியாம்பாளிடம் கலியுக ௵ 3058க்குச் சரியான விக்கிரம சகம் 14ல் பிரபவாதி வட்டம் பதினொன்றுவதாகிய ஈச்சுர வருடம் வைகாசி மாதத்தில் அவதரித்தவர் சங்கராச்சாரியார் என்று கூறப்பெறுகிறது. அவர் செய்த நூலில் சீர்காழியில் உதித்த ஞானக்கன்று என்றும் ஞானசூரியன் என்றும் வாழ்த்திப் பரசமயத்தை நிலை நிறுத்தியதை வியந்து வாழ்த்துகிற விவரம் காணப் பெறுகிறது. அதை யுணரும் போது இற்றைக்கு இரண்டாயிரத்து எட்டு ஆண்டுகளுக்கு முற்பட்டவர் சங்ராச்சாரியார். அவர் ஞானசம்பந்தரைக் கூறுகிருரென்ருல் திட்டவட்டமாக இருபது நூற்ருண்டுகளுக்கு முற்பட்டவரே ஞானசம்பந்தர் என்ருகிறது.

"காதற்ற ஊசியும் வாராது காணுங் கடை வழிக்கே" என்ற சொல்லால் துறவு பூண்ட மெய்ஞ்ஞானி யாகிய பட்டினத்துப் பிள்ளையார் பாடலிலும், ஞானசம்பந்தரைப்பற்றிக் கூறப்பெறுகிறது. அதை நோக்கும்போது திருஞான சம்பந்தர் பட்டினத்துப் பிள்ளையார் காலத்திற்கும் முற்பட்டவர் என்பது தெளிவாகிறது. பட்டினத்தாரோ காவிரிப்பூம்பட்டிணத்தில் வாழ்ந்தவர். காவிரிப்பூம்பட்டிணம் கடல் கொள்ளப்பெற்றே இற்றைக்கு ஆயிரத்தெண்ணூற்றைம்பத் தெட்டு ஆண்டுகளாகின்றன என்று சமண சமய நூலாகிய மணிமேகலையும் கூறுகின்றது. மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய நூல்களியற்றிய காலமாகிய கலி 3025 லேயே இசை இலக்கணம் அழிவுற்றிருந்ததை சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள் இசை லயம் பற்றிய விரிவை அந்நூலிற் செய்ததாலேற்பட்ட மாறுபாட்டைக் கொண்டேயறியலாம். (அது மாறுபட்ட தன்மையுடையது என்பதைத் தெளிவாயுணர வேண்டில் எமது நாதாந்தம் என்னும் பண்ணிலக்கணச் சூக்கத்தைப் பார்க்கவும்).

அதையே கலியுக ௵ 4760 ஆகிய இற்றைக்கு 306 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தாயுமானர் தமது பாடலில் "பாகத்திற் கவிதை பாடிப் படிக்கவோ பக்தி நெறியில்லை; வேத பாராயணப் பநுவல் மூவர்செய் பநுவலது பகரவோ இசையுமில்லை" என்று விளக்குகிருர். பட்டினத்து அடிகளோ தமது பாடலில் "கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கக் கசிந்துருகிப் பண்ணுண்டு பாட" என்று கூறுகிருர். ஆகவே யவர் காலத்தில் இசை இலக்கணம் இருந்தது தெளிவாகிறது மேலும் அவரியற்றியருளிய திருக்கோயினுன் மணிமாலையில் "மிடலொடி

Koviloor Digital Library

யப்பண் டிலங்கையர் கோனெரு விரலின்முக்குண்டு பண்பல பாடியவிரகு செவிக்கொண்டு முன்புள தாகிய வெகுளி தவிர்த்தன்று பொன்றியி டாவகை திடமருள் வைக்குஞ் செழுஞ்சுடர்" என்ற பாடலை நோக்கும்போது இராவணன் சாமவேத கானம்பாடி இறைவனை மகிழ்வித்து உயர்வு பெற்றதும் தமிழ்ப் பண்ணிசையிலேயே யென்றும், செந்தமிழ்ப் பண்ணிசையிலேயே சாமவேதம் இருந்துளதெனறுந் தெளிவாகிறது. அப்படியாய ஒரு காலம் இசை மரபு தெரியாமல் தவித்ததாகிய சிலப்பதிகாரம் தோன்றியதற்கு ஓர் ஆயிரம் வருடமாவது முற்பட்டிருக்கலாம் என்று யூகிப்பது தவருகாது. அப்படியாயின் இன்றைக்கு இரண்டாயிரத் தொண்ணூற்றைம்பது ஆண்டுகளுக்கும் முற்பட்டவரே திருஞானசம்பந்தர் என்ருகிறது.

இதற்கு மேலும் பார்க்கும்போது திருமங்கையாழ்வார் என்பவர் கலியுகத் தொடக்கத்திற் பிறந்தவராகையால் கலியனென்றேயொரு பெயரும் அவருக்கேற்பட்டுள்ளது. அவர் தோன்றிய காலம் கலியுக ளு௳ 397, பிரபவாதி வட்டம் ஐம்பதாகிய நள வருஷம் கார்த்திகை மாதப் பூரணை என்று சொல்லப் பெறுகிறது. அவருடைய சரித்திரக் குறிப்பில் 'காழிச் சீராம் விண்ணகரத்திருந்த ஞானசம்பந்த' னென்றும், 'வித்துவானிடம் வாது செய்து வெற்றி கொண்டார்' என்றும் காணப் பெறுகிறது.கலியுக ளு௳ 397-ல் பிறந்த திருமங்கையாழ்வார் காலத்திலேயே ஞானசம்பந்தன் என்று மக்கள் பெயர் வைத்துக்கொள்ளும் வழக்கமிருந்தது என்ருல் அவர் காலத்திற்கும் முற்பட்டவரே நமது திருஞானசம்பந்தர் என்ருகிறது. ஆகவே சரித்திரத் தொடர்புப் பிணைப்புள்ள நூற்களின் வழியில் ஆராயும்போதும் முற்கூறிய காஞ்சிப் புராணக் குறிப்பேதான் உறுதியாகிறது. இதை நூல் வழிச் சான்ருண்மைத்துவக் குறிப்பினர்கள் யாரும் மறுக்க முடியாது.

(அ) திருஞான சம்பந்தப்பெருமான் திருவவதாரம் செய்த காலம் கி.பி. ஏழாம் நூற்ருண்டு எனக் கூறும் கையறைக் கூற்றை மறுத்து ஆத்திகத்துவம், பாரம்பரியத்துவம், தலைமுறைத்துவம், சாசன முக்கியத்துவம், வியவாவிகாரத்துவம், கண்ணியத்துவம் ஆகிய எழுவர் கூற்ருகிய ஞானசம்பந்தர் துவந்த சத்துவச் சாற்ருக நாம் சாற்றியுள்ள இது கையறைக் கூற்றிற் கெதிர்ச்சாற்ரும் எனவறிக.

திருஞான சம்பந்தப் பெருமான் காலவரையறை தெளிவு :

(கூ) திருஞான சம்பந்தப் பெருமான் திருவவதாரம் செய்த காலம் கலியுகத் தொடக்கமெனக் கூறுவது எவ்வகையாலும் மறுக்கமுடியாத உண்மை. இதை

Koviloor Digital Library

வலியுறுத்துவதாகவே திரம் பெற்ற பற்பல ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன வென்பதாக இதுவரை நாம் கூறிவந்ததன் மூலம் தோன்றினும், இவைகளெல்லாம் பொதுப்படைக் குறிப்பாகவே யுள்ளனவாகையால் அப்படிக்கில்லாமல் தெள்ளத் தெளியவுரைக்கும் காலத்தை தனிப்பட்ட வரையறைக் குறிப்பாக திருஞானசம்பந்தர் பெருமான் முக்காலங்களையும் உணர்த்தும் முனிவர் கணங்களின் திருவருளைச் சிந்தித்து, வணங்கி, வாழ்த்தி உரைக்கின்றோம் காண்க.

திருமந்திரம்

(ம) இருந்தார் சிவமாகி எங்குந் தாமாகி
இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி
இருந்தார் முக்காலத் தியல்பு குறித்தாங்
இருந்தார் (திருவடி என்மனத்தாகவே)

திருஞான சம்பந்தப் பெருமான் அருளிச் செய்த தேவாரப் பண்ணிலேயே அம்மையார் ஞானப்பால் தரவுண்டு பாடத் தொடங்கிய கால நாட்குறிப்பு காணப் பெறுகிறது. அது "சகமுளர்பாடு பாட்டெனப்பாடிய மறையாகையால் சகமுளார் பாட்டிற் காண்பது போன்று அந்தக் குறிப்பைக் காண முடியவில்லை.

மறை என்பதை இயக்காய வர்க்க இயம் (யாக்ஞவல்கியம்) தேர்ந்து அவ்வியலின்படி பஞ்சரத்தைத்திரம் என (பாஞ்சராத்திரம்) வைகா நேயங்கொண்டு ஆகமம் பெறுமியலின்படி நோக்க வேண்டும். அவ்வாறு நோக்கும் போது பாசங்காரணமாக அனைத்தையும் தன்னகத்தே யடங்கும்படியாக அடக்கிக் கொண்டு அடங்கன்முறையாயப் பசு நிற்க. அதை உய்விக்கும் பொருட்டு அதற்கு ஆதியும் அந்தமுமாய்த் திருச்சிற்றம்பலம் தோன்ற, அத்திருச்சிற்றம்பலச் சுழியினிடத்து நடம்புரியும் தெய்வாரவாரமாய்த் தேவாரம் தோன்ற, அத் தேவாரத்தினுல் பசு ஆர்ப்பு ஐந்தாகிய பால், தயிர், நெய், கோசல, கோமியம் என்னும் ஐவகையாக ருக்கு, எசுர், சாமம், அதவர்ணமாம் தவளா கரம், தத்தவுரியம், பூவூடியம், வாமம் ஆகிய வேத வேதாந்தமான நான்மறை உருவாரம் தோன்றுகிறது.

இந்தப் பசுவிற்குப் பதியாய் பசுவேறுமெங்கள் பரமன் நிற்கின்ருன். பசுவில்லாமல் பால், தயிர், கோசல, கோமியம் எப்படிப் பெறுதலியலாதோ அவ்வாறே அடங்கன் முறை திருச்சிற்றம்பலத் தேவாரமில்லாமல் எழுதாக் கிளவியாய்த்

Koviloor Digital Library

தோன்றும் சுருதிவழி மொழி சிவகலைகளாகிய வேத வேதாந்தங்களைப் பெற இயலாதென்ற உண்மைகளெல்லாமுந் தோன்றும். இது,

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அநாதி
பதியினைச் சென்ற ணுகாப்பசு பாசம்
பதிய ணுகிற்பசு பாசம் நில்லாவே

என்ற ஆகம இலக்கணப்படி பதியை விட்ட அணுவாகிய விட்டணுவாம் உயிர் பாசங் காரணமாக இவ்வுடம்பெடுக்கிறது. இவ்வுடம்பில் பசுவை உய்விக்கும் பொருட்டு ஆதியும் அந்தமுமாகிய மேல் மூலங் கீழ் மூலத்தில் இறைவனுடைய திருப்பாதமாகிய வாசிநிலை பெறுகிறது. அதன் காரணமாக

அண்டங்கள் ஏழு மகண்டமு மாதியுங்
கொண்டசராசர முற்றுங் குணங்களும்
பண்டை மறையும் படைப்பளிப் பாதியுங்
கண்ட சிவனுமென் கண்ணன்றி யில்லையே"

என்ற அடங்கன்முறை இலக்கணங்கூறும் ஆகமப்படி இச்சரீரமே அடங்கன் முறையாக இருக்கிறது.

இதில் முன் கூறிய ஆதியந்த மூலத்திற்கிடையில் உள்ள ஆதார நிலையமைந்தில்

"ஆடிய காலில் அசைகின்ற வாயுவும்
தாடித் தெழுந்த தமருக வோசையும்
பாடி எழுகின்ற வேதாக மங்களும்
நாடி யினுள்ளாக நான் கண்ட வாறே"

என்றபடி நான் மறையுருவாரம் தோன்றுகிறது. பதியைச் சென்றணுகாப் பசுபாசம் என்றபடி "உயிரும் மனமுமாகிய, மால் பிரமனுக்கு எட்டாமல், இறைவன் பசுபதியாக நிற்கின்முன்" என்ற ஞானபாகையின்படி வகுக்கப் பெற்றது. இதன்

Koviloor Digital Library 5/1

அர்த்தபாகையே வேத வேதாந்தங்களாகும். கர்மபாகையே பசுவழி பாடாதிக் கிரியைகளாகும். "ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை" என்பதும், வேதத்தை விட்ட அறமில்லை' என்பதும், ஆகம வாக்கியம்.

இவ்வாருகிய வரம்பிற்குட்படாமல் வேதம் என்ற தலைப்புடனேயே ஒன்றிருந்தால் அது பால் என்ருல் வெள்ளையாய்த் தானிருக்கும் அதற்கு ஆதியாய்ப் பசு என வொன்று வேண்டுவதில்லை. வெளுத்த தெல்லாம் பால் தான்; உண்மையாகவே சொல்லுகிறேன்; நம்புங்கள். நான் சாதாரண மனிதனல்லன்; உலகைவுய்க்கும் பொருட்டுக் கடவுளாலேயேயனுப்பட்டவன்; நான் பெரிய மகரிஷி என்று ஒருவன் சொல்லி வெளிற்றறிவுடைய மக்களை மருட்டுவதாகத் தானிருக்கும் எனவுணர்க. இவ்வாருய மறை சதுர்விதந் தெரியாமல் 'வேதம் என ஏதோவொன்றைச் சொல்வதும் முன்புள்ள நான்கு வேதங்களுடன் இதுவும் ஒன்ருய் ஐந்தென நிலை பெறும் வண்ணம் நான் இதைச் சொல்லுகிறேன். இதுவும் ஒரு வேதம் தான்' எனக் கூறுவதும் மறையின் இலக்கண வாசனையறியாதார் கூற்றேயாம்.

இவ்வாறின்றி முற்கூறிய நான்மறை இலக்கணங்களெல்லாம் ஒருவர் உணர்ந்துளரேனும் அவரும் மறை வழங்குதற்குரியராகார். ஐம்பூதத்திற்கு ஆதியாயும் இறைவனுக்கு அணிமையாயும் இரா நின்ற நாதத்தை வசப்படுத்தி, ஏவல்கொண்டு, செயற்கருஞ் செயலாற்றும் பெரியோர்களே யதற்குரியவர்களாவர். அவ்வாருய தன்மை வாய்ந்தவர்கள் அருளிச் செய்யக்கிடைத்தவைகள் தான் இப்போதுள்ள ஏழு திருமுறைகளுமாகும். திருமுறை வகுப்பிற் காதியாய் விளங்குகின்ற பதிபசுபாசம் எனப்பகர் மூன்றிற் பதியினைப் போற் பசுபாசம் அநாதியாய் ஆதியைக் கூடாமல் தனித்து நிற்குமியற்படியுள்ளது உலக மக்கள் பண்செய் பாடல்கள் யாவும்

திருமுறையாய் வகுக்கப்பெற்ற தேவாரப் பண்கள் பிரமமாகிய பதியை சத்தத்திரேகம் (நாதவுடம்பு) கொண்ட பசுவாயிசைக்க, பாசிக்கும் பாசமாம் பாவை அட்டமாகக் கொண்டு பதி எதிர் நோக்கங் கொள்ள நிற்றலால், அந்தப் பாட்டத்தின் மிசை பதியின் பிரபாகரம் படிந்து காண, அதன் மீமிசை பூர்வம், உத்தரம் என்னும் இருவகையாய்ப் பண்தாராம் அச்சூத்திரத்திற்குரிய சூத்திரர் தோன்றி மறையவராகிய அந்த வேத மோதுவார்க்கு உரிமைப் பாடளித்து செயற்கருஞ் செயல்களெல்லாம் செய்து நிற்பவராக ஆகித் தோன்றும். இது பதியாகிய ஆதியைச் சார்வு கொண்டு ச. ஆதியாம் சாதியுடைத்தாம், தேவாரத் திருமுறை பண்சாதி யென்றுணர்க.

Koviloor Digital Library

இந்தப்பண் சாதியிற் ரேன்றிய, சத்தத்திரேகரே சட்திரியர், வாயிசை இயரே வைசியர், சூத்திரத்திற்குரியவரே சூத்திரர் இவர்களுக்காதியாயது பிரமம் ஆகையால் இவைகளெல்லாம் பிரம குலம் எனப்பெறும். இந்தக் குலமறையோதுவாரே மறையவர். எந்த வொரு பொருளையும், திருநெறியதாக வகுக்கவரும் அணமாம் வருணம் இந்நான்கேயாம். இந்நான்காகிய ஆ - அத்திணைக் கொண்டு இகத்திற்காண்பன யாவும் ஆத்திகம் எனப் பெறும். இந்த இயலின்படி வகுக்கப்பெற்ற திருநெறிய தமிழில் அந்தப் பண்ணிற் குரிய சத்தத்திரேகமாகிய இராகமே பசு. அந்த ராகத்தை வாயிசை இயமாகக் காட்டும் யாழ் யாப்புகளாகிய பாட்டமே பாசம். எந்தப் பாசத்தின் மீது பிரபாகரம்படிய எதிர் நிற்கும் பிரமமாகிய பதியே பாசமாகிய யாழ் யாப்புகளிற்ரேன்றும் சொற்கள், அதன் மிசையும் மீமிசையுமாய்த் தோன்றும், சூத்திரராகிய பண்தார்களே ஆச்சார் இயர், இது வேத மரபு.

இந்த மரபின்படி பாசம் பசுவோடொன்ற பசுபதி நோக்கம் கொள்ள நிற்றலால் பாட்டத்தில் பதியின் பிரபாகரம் தவிர வொன்றும் தோன்ருது. ஆகையால் தேவார முழுவதிலும் பாட்டமாகிய சொற்களில் இறைவனைக் குறித்த சொல்லே காணப் பெறுகிறது. அவ்வாறில்லையேல் மரபு கெட்டுவிடும். ஆகையால் நமது திருஞான சம்பந்தப் பெருமான் தமது அரும் பெறல் நிகழ்ச்சியை மரபு தவிராமல் காட்டும் முறையிற் காட்டுகிரேம் காண்க.

போதையார் பொற்கிண்ணத்தடிசில் பொல்லாததெனத் தாதையார் முனிவுற்றவராய், “அடே பிரம புரீசா! யார் தந்த பாலையடா வுண்டாய்”? என்று மிலாறெடுத்தோங்கி யச்சுறுத்திய போது ‘தோ’ என்று பாலருத்தியவர்களைச் சுட்டிக் காட்டியவாறே ‘தோடுடைய செவியன்’ என்று தொடங்கும் பதிகத்தை நட்டபாடைப் பண்ணிற் பாடுகின்ருர். அதில் மாதொரு பாகனுக இறைவன் வந்ததும் அந்த ஓருருவே அம்மையப்பன் ஆக இரண்டாய்ப் பிரிந்ததும் அந்த இரண்டே மீண்டும் ஒன்ருகியதுமான அதிசயக் காட்சியைச் சொல்லால் விவரித்து பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் பிரமபுரத்தைப் பதியாகக் கொண்ட பிரமபுரீசன் எதிர் தோன்றி நிற்கும் இவன் அன்றே, நானல்ல என்று பதிலுரைத்தவராய் மேலும் முன்னையூழில், தான் அருநெறிய மறைவல்ல முனிவனுக இருந்து பிறந்தமையால் அந்த ஞானத்தின் தொடர்பு இப்பொழுது சம்பந்தப்பட்டு தான் திருஞான சம்பந்தராய் விளங்கலுற்ற இயல்பையும் இசைப்பயன் சொல்லுமிடத்திற் சொல்லுகின்ருர்.

Koviloor Digital Library

இசை வழி பொருள் கோடல்

ஞான சம்பந்தர் என்ற திருப்பெயரைச் சொல்லாற் கூறிய தோடமையாமல் பண்ணிடையொன்பது பயில்வுறுவதாலாகிய நவவியாகரணம் என்னும் மேற்கணக்கொன்பதால் நோக்கும் போதும், முன்னியை நெய்தல் யாழ் முதிர்ந்து பாலையாய், யாப்பொடு சம்பந்தமாக வமைந்து, சம்பந்த முனிவன் சாற்றும் இயற்சீர், வஞ்சியாப்பெனவாகிக் காண்கிறது, யாப்பிற்குரிய இசையால் நோக்கும் போதும் இரண்டொன்றுக இயைந்து காணும், நாட்டம் படுமியைபாம் நட்டபாடைக் கட்டளை எட்டுங் கலந்து அகரமும் உகரமும் ஆகும் ஒருமையின் ஞானசம்பந்தனைதைச் சாற்றுகின்றது. இவ்வாறே தூலம், காரணம், சூக்குமம் ஆகிய மூவகையிலும் ஒரே குறிப்பமையும் வண்ணம் கூறுவது தான் நிறைமொழி என்று அறிக.

கோள்நிலை வழி ஆய்தல்

இவருடைய கோள் நிலையை நோக்கும் போது இலக்கு இனன் அதிபனை புதன் (இலக்கினதிபதியான புதன்) ஞானகாரகனுகிய கேதுவுடன் சம்பந்தமுற்று நிற்றலால் வானும் ஞானசம்பந்தன் எனச் சொல்லியவாறு தோன்றுகிறது. இவ்வாறு வானுலகும் மண்ணுலகும் ஞானசம்பந்தன் என வழுத்த வந்து தோன்றி திருஞானசம்பந்தப் பிள்ளையார் அருளிச் செய்த திருமுறைப் பதிகத்தில்

முதலும் இரண்டும் மூன்றும் ஆய, பதிகம் அடிதொறும் பதினெட்டெழுத்தாய், இயை நான்கடிக்கி எழுபத்திரண்டாம், ஆதலால் பதிகமொன்றிற்கு அமையும், எழுத்து எழுநூற்றிருபதாகும். ஆயினும் இரண்டொன்ருகத் துலங்கும், நட்டபாடையீதா-தலாலே அவ்வாறிது முந்நூற்றதுபஃதே ஆகும். முந்நூற்றறுபதெனும் எண் ஆண்டிற் குறுநாள் அளவைக் காட்டும் குறிப்பை இதனுட் குறிப்பிடுகின்றது. இவ்வகைக் குறிப்பை இசைப்பனவாகிய மூன்று பதிகம் மூவாண்டின் குறிப்பாம். அதனுள் நிரையசையாக வந்த ஒன்பது பாவிற் கொன்பானுன்கு முப்பத்தாறையும் முன்போற் பாதியாய் அமைக்கப் பதினெட்டாகும். இஃது மூன்று ஆண்டுகள் முடிந்து மேற்சென்றன பதினென் தினமெனப் பகரும் செய்தி குறிப்பாம். ஆக மூன்று ஆண்டுகள் நிரம்பிய நாள் பதினெட்டின் ஞானப் பாலுண்டதும் ஞானசம்பந்தன் நான் எனச் சொன்னதும் ஆய நிகழ்ச்சியை யறிவிப்பதுடன் குறுங்கலி கண்ணிற்குறுதிறம் ஆகையால் கண் ஒப்பாம் பண் கலியுகக் குறிப்பைக் காட்ட, அதனிற் கழிந்த ஆண்டுகள் பதினெட்டின்மேற் பத்தொன்பஃதென அடியொவ்வொன்றிற்கமைந்த எழுத்துக்கள் காட்டுகின்றன எனக் கண்டு கொள்க.

Koviloor Digital Library

கலியுக ௵ 18 முடிந்து 19ல் திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருமுலைப்பாலுண்டது அப்பொழுது அவர் வயது மூன்று வருஷம் பதினெட்டு நாள் ஆகும். இதை அவரே மறைநூலிலக்கணத்திற்கு வழுவு நேராமற் காட்டியவாறு காட்டினோம். அடுத்தபடியாக அவர் பிறந்த நாட்குறிப்பு கோள் நிலையாதியனவற்றையும் தெளிவிக்கின்றோம் திருஞானசம்பந்தப் பெருமான் திருவவதாரம் செய்தது பிரபவாதி வட்டம் இருபத்தெட்டாவதாகிய செய வருஷம். இது கலியுகம் பிறந்த பிரமாதி வருஷத்திலிருந்து பதினாறுவது வருஷம் என்ன மாசம் என்பதும், கோள் நிலையாதிகளும் அருண்மொழித் தேவர் அருளிச் செய்த பெரிய புராணம்

"அருக்கன் முதற்கோள் அனைத்தும் அழகிய உச்சங்களிலே
பெருக்க வலியுடன் நிற்கப் பேணிய நல்லோரையெழத்
திருக்கிளரும் ஆதிரைநாள் திசை விளங்கப் பரசமயத்
தருக்கொழிய சைவமுதல் வைதிகமுந் தழைத்தோங்க"

பிறந்தார் என விளக்குகிறது.

உடலும் உயிரும் எனப்பெறும் சூரியலக்கினமும் சந்திரலக்கினமும் ஒன்றுக வமையுமேல் சந்திரா லக்கினத்தை மட்டும் குறிப்பிட்டால் சூரிய லக்கினத்தையுஞ் சொல்லியதாகக் கொள்ளல் கணியநூல் வழக்கு. அதன்படி நோக்கும் போது திருவாதிரை நாள் மீனிற்றேன்றினுர் என்பதை மட்டும் சொல்லியுள்ளதன் பொருட்டிட திருவாதிரை நாள் மீனிற்குரிய மிதுன லக்கினமே சென்ம லக்கினமும் என்பது தெளிவாகிறது. அதை யாதியாகக் கொண்டு கோள் நிலையைக் கூறும் போது இரண்டாமிடத்ததிபனுகிய சந்திரன் லக்கினத்திலேயே நிற்கின்றுன். ஆட்சியோ உச்சமோ எய்தவில்லை.

ஆகையால் அருக்கன் முதற்கோள்கள் எலாம் அழகிய உச்சங்களிலே பெருக்க நலமுடன் நிற்க என்று மூன்றுமிடத்ததிபனுகிய சூரியன் முதற்கோள்கள் என்று) குறிப்பிடுகிறுர். அப்படிக் குறிப்பிட்டதில் சூரியன் உச்ச ராசியில் நின்றுர் என்று சொல்லாமல் அழகிய உச்சங்களிலே வரிசையாக உச்ச ராசியிலே பெருக்க நலமுடனிற்க என்றமையால் மூன்றுமிடத்ததிபனுகிய சூரியனை யாதியாகக் கொண்டு மும்மூன்றுக வரிசைப்படுத்திப் பார்க்கின் சிம்மத்திற்கு மூன்று துலாம். அந்த ராசியதிபதி சுக்கிரன் உச்சம், துலாத்திற்கு மூன்று தனுசு, அந்த ராசியாதிபதியாகிய வியாழன் உச்சம்; தனுசிற்கு மூன்று கும்பம், அந்த ராசியாதிபதி ராகு உச்சம்; கும்பத்திற்கு மூன்று மேடம், அந்த ராசியதிபன் செவ்வாய் உச்சம்; என்பதை

Koviloor Digital Library

அறிகிருேம். சனி அவருடைய சொந்த வீட்டிலேயேயுள்ளமையால் அதைப்பற்றி யொன்றுஞ் சொல்லவில்லை. ராகு விருட்சிகத்தினிற்கிற படியால் கேது அதற்கேழாகிய இடபத்தில் நிற்கிறது. இலக்கினுதிபதியாகிய புதன், ஞானகாரகனுகியுள்ள கேதுவுடன் சம்பந்தமுற்று நிற்பதாகிய தன்மையாலே ஞானசம்பந்தராக ஆனுர்.

இதை வரிசைப்படுத்திச் சொல்லுகிருேம். மிதுனமேலக்கினம் அதிற் சந்திரன், இரண்டில் வியாழன், ஆறில் ராகு, எட்டில் செவ்வாய் சனி, பத்தில் சுக்கிரன், பதினென்றில் சூரியன், பனிரெண்டில் கேது புதன் இதுவே திருஞானசம்பந்தப்பிரானுரின் கோள்நிலை என்பதை அருண்மொழித் தேவருடைய திருவாக்கிற் கண்ட குறிப்பின்படி காட்டினேம்.

சூரியன் உச்சம் என்றமையால் மாசம் சித்திரை என்பது தெளிவு. நட்சத்திரம் திருவாதிரை - என்றமையால் சித்திரை மாசத் திருவாதிரையில் சஷ்டி திதி என்றும், அறுவைச் சந்திரனே அமையும் என்பதும் தெளிவாகிறது. ஆருவது நாள் மீன் ஆருவது வயதுத் திங்கள் என்பது தெளிவாகும் போது முருகவேளின் அம்எச்சம் பெற்றுத் தோன்றிய பெருந்தகையாளரின் கிழமையும் ஆருவது ஆகிய வெள்ளிக்கிழமையே என்றும் தேதியும் ஆரும் தேதியேயென்றும் யாம் வரையறை செய்கின்ருேம். சித்திரை மாச வளர்பிறைச் சஷ்டிதிதி திருவாதிரை நட்சத்திரத்தில் சுகர்நாமயோகம் கௌலவ கரணமே தான் அமையும் இதில் பக்கமும் வளர்பிறைப் பக்கமேயாகும் இதை வரிசைப்படுத்திக் காட்டுகிருேம். கலியுக ஆண்டு பதினுறுக்கு செய ஞு சித்திரை மீ 6 உ வெள்ளிக்கிழமை திருவாதிரை நாள். சுகர்ம நாமயோகம் - சஷ்டி திதி கவுலவகரணம் வளர்பிறைப் பக்கம் கூடிய நன்னுளில் உதயாதி நாழிகை - ஒன்பதையகாலே மூன்று வீச கால் வீசத்திற்குமேல் திருவவதாரம் செய்தார். திருக்கிளரும் 'ஆதிரை நாள் திசை விளங்க' என்று குறிப்பிட்ட பெரிய புராணச் செய்யுளில் 'திசை விளங்க'. நான்கு விளக்கம் பெற என்றது சந்திரன் நின்ற நாள் மீன் திருவாதிரை. அது பொருந்திய ராசி மிதுனம். சென்ம லக்கினம் நின்ற நாள் மீன் திருவாதிரை, அது அமைவு பெறுமிராசியும் மிதுனம், ஆகிய நான்கும் திருவாதிரையேயாக அமைவதேயாம், அவ்வாறமைவதற்குரிய நேரத்தை அளவிட்டே தான் செனன நாழிகை ஒன்பதே காலே மூன்றுவீசம் கால்வீசம் என்று கூற முடிகிறது. இவ்வாருக ஞானசம்பந்தப் பெருமானுடைய கோள்நிலைக் குறிப்பைத் தெளிவு பெறும் வண்ணம் வரையறை செய்து காட்டினேம். இவர் முருகவேள் அம்எச்சமாகத் தோன்றியவர் என முருகவேளின் மெய்யடியாரும் ஞானநுபூதி-மானுமாகிய அருணகிரிநாதர் கூறியதன் காரணம் என்ன என்பதையும் விளக்கி நிறைவு செய்கின்ருேம்.

Koviloor Digital Library

உ

சிவமயம்

திருஞானசம்பந்தர் ஜாதகம்

சு	சூ	கே பு	ல சந்
	உ இராசி		வி
செ சனி			
	ரா		

கலியுக ஞூ 16க்கு, நலந்திகழும் செய ஞூ சித்திரை மீ 6 உ. வெள்ளிக்கிழமை திருவாதிரை நட்சத்திரம் சுகர்ம நாமயோகம் சஷ்டிதிதி. கவுலவ கரணம் பூர்வபட்சம் கூடிய நன்னாளில் உதயாதி நாழிகை ஒன்பதேகாலே மூன்றுவீசம் கால்வீசம் அளவில் சீர்காழிச் சிவபாத விரதியருக்கு உலகம் உய்யச் செய்யும் திருமகவாக திருஞான சம்பந்தப்பிரான் திருவவதாரம் செய்தருளினார்.

ஞானசம்பந்தர் என முருகன் வந்தார்

உலகமெலாம் எரிபரந்து தணிந்த காலத்
    துற்பவித்தால் ஆனனாங்களைந்தி லொன்று
நிலவாறு சுடராம் சித்துருவாய் வந்து
    நீரேற நிமிர்ந்த நிலையதனிற் தோன்றிக்
குலவுசடப் பெண்ணூற் கானற் பாலுண்டும்
    குன்றுமற் குளக்கரையின்னமுது நின்று
நலமோங்க வுமைதரு ஞானப் பாலுண்டால்
    ஞானசம்பந்த ரெனும் முருகன் றுனே. (க)

மறைவழக்கம் சிதைந்தழியத் தீங்கு செய்யும்
    மாபாவிகள் கூட்டம் மலியவஃதாற்
குறைப்பட்ட நலிவகற்றப் பத்திரண்டாய்க்
    கூறுமுபதெசம் படையாய்ப் படைகலன்கள்

Koviloor Digital Library

இறையளிக்க வதின் வெல்வி நெடியதாக
ஈச்வரியாள் நாதாந்தச் சத்திநல்க
நறைகமழ் மாமலர் மார்பத் தேற்றுராகில்
ஞானசம்பந்த ரெனு முருகன் றனே. (௨)

ஆரணமோதித் தாளிட்டடைத் தப்பர்
அரிதிற்றீர்த்திட வெளிதிலடைத்துந் தீர்த்துங்
காரணராம் அப்பர் மறைமுடிவாம் உண்மை
காட்டுகெனத் தாழுவதைக் காட்டும் ஞான
பூரணராஞல் முத்திலக் கமாகப்
பூட்டூர்திப் பரிகொண்டால் பூதஞ் சார்ந்தால்
நாரண ரிந்தி ராதியற்கு வாழ்வு நல்கும்
ஞானசம்பந்த ரெனு முருகன் றனே. (௩)

வேள்வியின் முட்டுப்பாடு விஜளதறீர்த்தால்
வெம்மை தவிர்த்திடப் பசுமைகுரு கிரண்டும்
தாட்கீழும் வெளிமேலும் சமையலுற்றுல்
தாரையக வசுரனெனச் சாற்றும் வண்ணம்
நீள்வழியினிடத்து வழிதடுத் தடர்ந்து
நிற்கும்மா யாவியொடு சிகரந்தூளாய்
நாள்உலந்து படவெல்வி நெடிது கொண்டால்
ஞானசம்பந்த ரெனு முருகன் றனே. (௪)

வேதவேள்வியை நிந்தித் துழலா நின்ற
வெய்யருளங் கொதித்து வஞ்சத் தீப்போர் செய்யப்
பாதகரைப் போர்துரந்து நெடிதே வேந்தைப்
பற்றி வனைத்திடத் தீப்போர் விஜளத்த காஉல
ஏதமுற்று நெடிதுசுரஞ் சுரமென்றேங்கு
மியல்புடையனுஞ் சூரனெதிர நோக்கும்
நாதனுடற் கூறுசெய்து வெல்வி கொண்டால்
ஞானசம்பந்த ரெனு முருகன் றனே. (௫)

Koviloor Digital Library

வான்மறையப் படரொளியிற் பசந்து பச்சை
வடிவுகொண்டும் பெருகி நிறைந்தோடு மாற்றின்
மேன்மறையா தெதிர்ந்தெழுந்து மெகிறிச் சென்று
வெந்தீயின் றிரளுருவ மென்ன நின்றுங்
கோன்மறைந்து தமிழ் விரகராக வந்த
குறிப்புணர்ந்து மயில் சேவல் தமிழாய் வந்தால்
நான் மறையை யிவ்வுலகிற் களிக்க வந்த
ஞானசம்பந்த ரெனு முருகன் ருனே. (சூ)

ஈசனருட் சத்தியெனும் வெல்வி நீண்ட
வியற்கையாற் சத்திவேல் என்னும் நாத
வோசையாற் சுரம் நெடிதாம் சூரன் கூறுற்
றெடுங்கிப் பண்டியையு நெடிதுடையோனுகை
மாச மருந்திய ரெலாம் உடல் பிளந்து
மாய்ந்தழியப் பிணக்காடு மண்டும் வண்ணம்
நாசம் செய்தமர் பொருது வெற்றி கொண்டால்
ஞானசம்பந்த ரெனு முருகன் ருனே. (எ)

கமலையினன் மகளென்னப் பூச மீனிற்
கரியோன் புத்திரி யென்னக் காரிபுத்தி
யமையவரு பூம்பாவை இந்திரனுக
வமை கேட்டைக் குரிய புதனனுகப் பின்னர்
இமையவர்கோன் நிலைதிரித லெனுங் கேதாம்பரம்
பெய்தி விடங்கொடு மீளா வியற்கை எய்தச்
சமையாறின் மேலாறு நிறையனுற்ற
தருணத்திற் பரசமயக் கோளறுத்தே. (அ)

பரசமய கோளரியாய் விளங்கும் ஞான
பானுவாம் முருகவேள் திருமுன் பாகக்
கரநீள் தெய்வக் களிற்றின் புத்திரி யென்னும்
கைமீனிற் குரியமதி புத்தியாளை

Koviloor Digital Library

அரனேசச் செட்டிப் பேரிந்திரன் நல்க
அங்கு அம்பூம்பாவை மணம் பொருந்திப் பூக்க
நரர் சுரர் பல்கணம் வாழ்த்தத் தமிழ் புகன்ருல்
ஞானசம்பந்த ரெனு முருகன் ருனே. (௯)

சிவமுனிவ னுழைமருவ வரையின் மீது
செனித்தமக ளெனராகு மகரஞ் சேரப்
பவஞ்செயிலக் கிளஞ் சிங்கமாக வந்த
பாலகி வேடுவர் மகளாய் வளர்த்த லென்ன
நவிலுமக மீன்திசையில் வளர்ந்து வாழும்
நற்பருவத் தமைதுலைக் சுக்கிரனிற் கிள்ளைக்
குவியலட ராது தினைப் புனத்தைக் காக்கும்
கூறுடைய சேய் பொசிப்புக் கூடுங்காலே. (௰)

சேய்புசிக்கும் நற்கனியென் றுணர்ந்து வீணைத்
தேவென்னுங் கோள்விதியர் சொல வெய்யம்பு
பாய்ச்சிய வேடுவனுருவாம் மகநாள் மீன்கோள்
பாழ்ங்கிழவ னுருவுடைய பரணி நாட்கோள்
ஏய்ந்தகல வேங்கையுரு விரவியுஞ் சென்
றேக நின்ற மலைக்கிழவன் யானைத் தோற்றம்
வாய்ந்துவரும் கைம்மீன் கோள் சாற்புற்றேக
வானதின் பின்நிறைவு பதினுருண்டுற்றே. (௰௧)

உற்றவர்முன் பெருமணங் கொண்டெழுந்த காலை
யுறவினரெல்லாந் தொடர வொளிருஞ் சோதிக்
கற்றை யுருக் கொடிகதித்து முழக்கங் காட்ட
கதிகலங்கி யயலார்கள் மயங்கி வீழப்
பற்றற்ற மெய்யன்பர் கசிசார்ந் துய்யப்
பண்ணருட்சோதிப் பிழம்பாய்க் காட்சி தந்தால்
நற்றவத்தர் நீண்மரபு தழைக்க வந்த
ஞானசம்பந்த ரெனு முருகன் ருனே. (௰௨)

Koviloor Digital Library

ஞானசம்பந்த ரென முருகன் வந்தால்
ஞாயிறு முதற்கோளைந்துச்ச மேறும்
ஆனனமோ ராறெனரா காறில் நிற்கும்
அதனெல்லைக்குள்ளறு கோணிற்குமொன்றுந்
தானத்தோன் ஞானகரரகனுங் கேதிற்
சம்பந்த முறுஞ்சனிபோ யெட்டினிற்கும்
வானமதி யாதிரையில் மிதுனலக்கின
மாகவமைந்துண்மை நமக்குணர்த்துந்தானே. (௧௯)

உண்மையுணர்த்தும் மகத்திற் சந்திரன் சிங்கம்
உதயமகராசி சுத்தோத்தமத்திரீயென்
றண்மை நாலேழ்பத்தாந்திரங்கள் சுத்த
மாம்பத்தினிருமருங்கு மவ்வாருகும்ம
பெண்மையுறு மிரவிசனியெட்டினிற்கும்
பின்முன்னுய்க் கேதுபுதன் கவிபொன்ராகு
மண்மெய் யோனும் மமையுமிவ்வாருக
வருமொரு பெண்வள்ளி நாயகியாமென்றே. (௨௦)

கலியுக ஞு 5066க்குச் சரியான விசுவாவசு ஞுத்தில் இது எழுதிநிறைவு பெற்றது.

திருஞானசம்பந்தர் திருவடிகளே சரணம்.

மூவராய்வந்த முத்தமிழ் மறையோர்

ஒடுங்குதலுந் தோன்றுதலுந் தலைப்பட்டோங்கும்
ஊழியுளார் தாய்தந்தை யொன்றுமில்லார்
அடங்கலினும் மேம்பட்டசத்தி தன்னின்
அதிகார நாயகமொன்றில்லாச் சத்தி
உடன்தோன்றிப் புறப்புறத்தும் புறத்தும் ஆகத்
துட்புறமாம் அகப்புறத்தும் அகத்துந்தானய்
நடங்கொள்ளுஞ் சத்தியுயர் இயற்கையுள்ள
நாயகர் வாகீசமுனி நா தன்ருனே. (௧)

Koviloor Digital Library

எண்டிசையின் காவலர்கட் குரியசக்தி
யெண்மருக்குஞ் சத்திகொடுத்தியங்குங்கன்னிப்
பெண்ணுகுவாய் நாற்பத்து முக்கோணத்திற்
பிறைவட்டத் துற்ற நவசத்திவேதம்
நுண்ணியநற் கலைகளெலாம் நாவினின்று
நுவல் நாவக்கரசியெனுஞ் சத்தியோங்கு
திண்ணியராம் வித்வாம் சரெனும் வாகீசர்
திருநாவுக்கரச ரெனுஞ் சிவனூர் தானே. ௪

பெரும்பூத மஞ்சுந்தாழ்ந் தேவல் கேட்கும்
பிள்ளையொன் றுலகமெலாம் விஜயஞ்செய்து
வரும் அதன்முன் எல்லாமும் அப்பரென்று
வலஞ்செய்தப் பூதிபெறும் பேறுகொண்டு
இருந்திடத்தே பார்ப்பொன் றெக்களித்திருக்கும்
இயல்புடைமையதனுல் வாகீசரென்னும்
திருநாவுக்கரசவரே யப்பரான
திருநின்ற செம்மையுள சிவனூர்தானே. (ரு)

மலையேறித் தடத்தழுந்திக் குளித்தெழுந்தும்
மார்க்கத்தை யாறுகரை கண்டோர்காணும்
நிலையான கயிலாயந் தான்வாழ்கின்ற
நிலையாகக் காட்டுமுயர் வித்துவாம்சக்
கலையினராய் உருக்கொண்டு வந்திட்டாலும்
கனன்மழுவாம் உழைவாரங் கரத்திற்காணும்
தலைமூன்றும் படையிடபம் புயத்திற் றேற்றந்
தரக்காட்டும் வாகீசர் தன்மை தானே. (சு)

சத்திதனித்திடமுடுகும் வேதைக் காற்றூர்
தனித்தலொழிந் தருட்சத்தி சாரத் தோன்றும்
முத்தமிழ்நான் மறையோதிக் களித்திருப்பர்
முதுமறைக ளாயிரமும் முடிய வோதி

Koviloor Digital Library

எத்திக்குஞ் செயவிஜயஞ் செய்தோன்ருழ்வுற்

றியல்பழிந்தவிடந் தோன்ற லன்றித்தான்சொல்

தித்திக்கும் மறைகளிற்றன் உண்மைத் தோற்றம்

தெரியநில்லார் வாகீசர் சிறப்புத்தானே. (ரு)

மறையோதித் தாள்பூட்டி யடைக்கப்பெற்ற

வண்மையரிகிற் றீர்த்து எளிதாயிங் ஙண்

சிறைசெய்தும் அதுதவிர்த்தும் அதிகாரங்கள்

செய்பவனீ மறைப்பொருளைத் தெளியக்காட்டும்

முறைசொல்வா யெனக்கேட்டுக்காட்டக்கண்டு

முதிர்ந்தபெரும் பேறு பெற்ருர்போலச் சேயோர்க்

கிறைநடித்துக் களிப்பூட்டி யுவகைகொள்ளு

மியல்பிள்ளைக்கப்பர் செய்யுமியற்கைதானே. (சு)

முக்கண்ணுக் கறைமிடற்றை மறைத்துக்கொண்டு

முன்னவனோர் வித்வாம்ச ராகவந்த

தெக்காலும்நீங்காத பாம்பு கொல்லி

எழில்நிலவு காந்தாரம் கொன்றை பேந்தை

யுக்கஞ்சா தாரிபா ரிடங்காந்தார

முற்றபஞ் சமஞ்சுடலை பழமைபூத்த

தக்கவிரா கங்கங்கை பழம்பஞ்சுரம்

தமறுகமிந் தளம்மழு சீகாமரம்மே. (எ)

காமருவும் புள்ளியுழை குறிஞ்சிசீற்றம்

காட்டுபட நாகம் நேரிசை யாம்கொல்லி

ஓமருவு பூணுகம் விருத்திக்கொல்லி

யுற்றதலை மாலைக்குறுந் தொகையே ழோசைப்

பாமருவு நல்வீணை தாண்டகமிப்

படியாகி வேதவுருக் கொண்டரற்ற

வேமருவு ருநின்ற வுளவுகண்டேன்

மேன்மைவா கீசரென விறைஞ்சினேனே. (அ)

Koviloor Digital Library

கார்மருவு மாலமர் காராளர் தெற்கின்
கண்மூர்த்தி விதிமைந்தர் ஒருநால்வர்க்குச்
சீர்மருவு முபதசமும் கையாற் காட்டச்
சின்முத்தி ரையுமாகித் திகழும்மோனம்
நார்மருவு நலமொன்று தலையெலாம்சொல்
நமச்சிவய வேயென்று ஞானபோதம்
நேர்மருவும் படியறஞ்செய் யியற்கை மேதா
நின்மலனூர் வாகீசனி யற்கை தானே. (௬)

மருணீக்கியர்பிரும சேனர் சுத்த
வாகீசர் திருநின்ற செம்மையாளர்
திருநாவுக் கரசர்வித் வாம்சரான
சிவன்மேதா தெற்கின்கண் மூர்த்தியப்பர்
அருண்ஞான மழைபொழி காராளர் வேதம்
ஆறங்கமுதற்கலை களருளிச் செய்ய
உருவெடுத்து நம்மிடையே வந்தசெம்மல்
உபயபதத் தாமரைகள் போற்றி போற்றி. (௭)

வேத வித்யா ரூபம்

கொல்லி-பாம்பு; காந்தாரம்-மதி; பியந்தைக்காந்தாரம்-கொன்றை
சாதாரி-இடபம்; காந்தரபஞ்சமம்-பூதம்; பழந்தக்க ராகம்-சாம்பல்;
பழம்பஞ்சுரம்-கங்கை நேரிசைக்கொல்லி-நாகம்;
விருத்தக்கொல்லி-பூணுகம்; குறுந்தொகை-தலைமாலை; தாண்டகம்-வீணை;
இந்தளம்-டமருகம்; குறிஞ்சி-மான்; சீகாமரம்-மழு.

மூவராய்வந்த முத்தமிழ் மறையோர்களில் வாகீசப்பெருமான்
அவதார பூர்வம் நிறைவு பெற்றது.

ஐயிரண்டுள்ளாய் அறுமூன்றடங்கும்
புராணம் தந்த புராதனர் வாழ்க! வாழ்க! வாழ்க!

Koviloor Digital Library

மூவராய்வந்த முத்தமிழ் மறையோர்

அகிலாண்ட கோடிதனைத் திடப்பரம்மாம்
அண்டபுரா ணன்றனது வாமநன்றுய்
மகிழ்வுட னுடியின் கண்ணுண் மணியிற்கண்டு
வரவழைக்கும் வசித்துவஞ்சேர் மணிவண்ணன் போல்
அகிலமெலாம் மறுமலர்ச்சி யடையும் வண்ணம்
ஆதித்தன் உத்திராட மதியை நோக்கும்
சுகிர்தவிலக் கிணத்தோணம் தோன்றவந்தால்
சுந்தரமூர்த்திக ளென்னும் திருமால்தானே. (௧)

இலிஇங்கண் உளதென்று வேதஞ் சொல்லற்
கியைந்துபது மஞ்சொல்ல வெதிரிற் றேற்றம்
பொலிபுராணக்கிழவன் பெயராப் பற்றுய்ப்
பூமிசை யேநடந்தடிக்கீழ்ப் படுத்துமாப்போற்
கலியாணந்தடுத் தடிமை யாவணத்தைக்
காட்டிவலு வழக்காய் வன்றெண்டுசெய்யச்
சொலிக்கிழவன் பூமிசை யேசெலப்பின் சென்றுற்
சுந்தரமூர்த் திகளென்னுந் திருமால்தானே. ௨

சைவமெனுஞ் சிவனுடைச் சம்பந்தம்பெற்றோர்
சந்நிதியின் றிருமுன்னர் தாழாதேக
மெய்நாற்ற மங்கமச்சரூபங் கண்டு
வெளிவரப் பார்த்திருக்குமன்பர் விறண்மிண்டைக்கண்
உய்வுபெறப் பாதலந்தாழ்ந்த தெழுத்தொண்டுற்றே
ரோடொன்று பெறற்கமையப் புராணனல்கும்
துய்யசதுர் மறைமரைத் தோன்றிநின்றுற்
சுந்தரமூர்த் திகளென்னுந் திருமால்தானே. (௩)

ஆக்கநேயம் பொருந்தி விளையாட்டின்கா
ரணமாகச் சத்தியிய நேர்ந்துகண்கள்
நோக்கமற மறைக்கவந்த காரஞ்சூழ
நொய் தெனவோர்கண்கொண்டு நொடித்த வெல்லாம்
போக்கமறைத் திட்டசத்தி யியநீக்குற்ற
புராண னெனப்பெறற்கமை யத்துவிதம்பெற்றச்

Koviloor Digital Library

சூக்குமகா ரணத்தாற்று வந்துநின்றுற்

சுந்தரமூர்த் திகளென்னுந் திருமால்தானே. (௪)

வைநவமென்னுங் கூர்மை புதுமைபெற்று

வருநயனம் அமைந்தோர்நால் வகையாம்பூவிற்

செய்நவ மாயிரத்திலொரு குறைவுமின்றித்

தீர்க்கவைம் பேரறிவுகளும் கண்கொள்ளப் கொண்டு

ஐயவனவன் பதத்திட்டுச் சுதர்சனம்பெற்

றந்நலத்தாற் பூமிதிரையோதத் தாழ்ந்த

துய்யவரா கம்மென்ன மகிமாவுற்றுற்

சுந்தரமூர்த் திகளென்னுந் திருமால்தானே. (௫)

மாஅர்க்கண்ட நடைமுறையாம் நியதியெல்லாம்

வகுக்குமதி காரமதைப் பிரமன்பெற்றுத்

தீர்க்கமுள திருத்தொண்டரிடத்து மஃதைச்

செலுத்தக்கண்டது தவிரத்திருத் தொண்டோர்நம்

நேர்கண்டா யென்றதற்குக் கரிமாவாக

நீண்ட காலங்களின் முதலையுண்டு

தூர்ந்ததுதீர்த் தம்முதலை மதலைநல்கச்

சொன்றுற்சுந் தரனென்னுந் திருமால்தானே. (௬)

பூவிடையம் புராணமுற விண்ணைநோக்கிப்

புவிவாழும் உயிரினங்கள் நலியும்வண்ணம்

பாவிகளாய்முப் பூராதிபர்கள் செய்யும்

படுநாசங் கேட்டுபெறற் காமையமாபோர்

மேவி கமலையகக்கண் தரையகக்கண்

வித்துண்மலி கோட்டைகள்விண் ணியங்கிவீழ்தல்

சோவிடையே லகுமாவய் நகைக்கநின்றுற்

சுந்தரமூர்த் திகளென்னுந் திருமால்தானே. (௭)

காருடனென் றேலமிடக் காத்தளித்த

கறைக்கண்டன் றிருவருளாற் கனதனாங்கள்

சீருடனெய்தியது விரிதிரை வெள்ளத்துட்

சேரவது பெறவேண்டித் திருக்குளத்துள்

Koviloor Digital Library

நீருடனெய்திடுங்கூர்ம மெனத்தாழ் தாழ்ந்தன்
நீர்நிலையினிதித் திரள்களான தெல்லாம்
கூருடனெய் திடும்அணிமாவுற்றுல் எம்மான்
குலாவன்புச் சுந்தரராந் திருமால்தானே. (அ)

பிரமன்கை வருஅத்தமாகத் தோன்றும்
பெறற்பவ மாயையினுற்றன் முதல்வனென்றும்
அரனுடனேபகா உவிதம் பெறற்கமைவாம்
ஆக்கமுடையோம் என்னும் அகந்தைமூடத்
திரஞ்சாரமுபய மிலாதிரவி திங்கள்
தேயத் தேவெல்லாந் தீங்குண்டுதெற்கின்
புரஞ்சார்ப தீசார வொளிவிழுந்து
புகழ்ந்த கன்றுற்சுந்தரராந் திருமால்தானே. (கூ)

காந்தமெனும் ஒன்றுபட்ட தோற்றமுற்றக்
கடவுளர்கள் நாரதியத் துதிகள்செய்யச்
சாந்தமுரைத் தகிலபுவனங்க ளுய்யத்
தன்னுருவங் கரந்துவெளி தோன்றத்தேரா
தாள்தப்புச் சொல்லி யிகழ்ந்திடச் சீற்றங்கொண்
டவனுடலம் பிளந்தாடல் செயுமீசத்வம்
ஏய்ந்தவரி போற்கலிக்காமர் நிகழ்ச்சி
யெய்தநின்றுற் சுந்தரராந் திருமால்தானே. (ய)

(மூவர் அவதார பூர்வம் தமிழ்வேத நாவலன் தந்ததிந் நாள்)

கலியுக இலருகூஅயஅ. (ருOஅஅ) அட்சய ஞூ சித்திரை மீ 20 உ சித்திரைச் சதயம்.

மூவராய் வந்த முத்தமிழ் மறையோர்களில் ஆரூர் நம்பிகள்

அவதாரப் பூர்வம் நிறைவுபெற்றது.

அருந்தொண்டு செய்து பரமனடியவ ராயுலகில்
வருந்தொண்டர் கூட்டங்கள் அன்றுமின்றும் என்றுமாவதெலாம்
பொருந்தும் அறுபத்து மூன்று னெனவே புகன்றவரும்
பெருந் தொண்டர் நாவலா ரூரரெனச் சொல்பெருந்தகையே.
ஆரூர் நம்பி அடிகள் போற்றி! போற்றி போற்றி !!

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR
A. No. 46355
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

எமது இதர வெளியீடுகள்

வ.எண்.	நூலின் பெயர்	விலை
1.	கரணஇலக்கணம்	ரூ. 5.00
2.	இராமாயண இலக்கியம்	ரூ. 27.00
3.	பண்ணிலக்கணச் சூக்கம்	ரூ. 25.00
4.	அகத்தியம்	ரூ. 108.00
5.	முத்திநெறி இலக்கணம்	ரூ. 51.00
6.	இலிங்க புராணம்	ரூ. 51.00
7.	பண்செய் கரணம்	ரூ. 5.00
8.	இரத்தினச் சுருக்க இராமாயணம்	ரூ. 21.00
9.	அண்டஒளி திருமூலர் திருமந்திரம் (சூனிய சம்பாதனை)	ரூ. 51.00
10.	கலைஞானம்	ரூ. 21.00
11.	திருமுறைப் பெருநூல் விளக்க நான்மறை	ரூ. 400.00